# அவசரக் கூட்டப்பொருள்

2009ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3 (2) ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

1. இம்மாநகராட்சிக்கு 2009–2010ம் நிதியாண்டிற்கு பகுதி 2 திட்டத்தின் கீழ் 3.00 கி.மீ. தூரத்திற்கு மண் சாலைகளை தார் சாலைகளாக மாற்றம் செய்ய ரூ 50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை (எம்எஸ்) எண். 135 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள் 30–07–2009ல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

   எனவே இம்மாநகராட்சி பகுதியில் உள்ள கீழ்க்கண்டுள்ள 7 (ஏழு) இடங்களில் தார் சாலைகள் அமைக்க ரூ 60.65 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை செய்யவும் கூடுதல் செலவினம் ரூ 10.65 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணி விபரம் | மதிப்பீட்டுத்தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | எழில் நகரில் தார் சாலை அமைத்தல் | 13.37 |
| 2 | ரோச் காலனியில் தார் சாலை அமைத்தல் | 11.40 |
| 3 | சக்தி விநாயகர்புரத்தில் தார் சாலை அமைத்தல் | 7.68 |
| 4 | ஸ்டேட்பாங்க் காலனியில் தார் சாலை அமைத்தல் | 3.47 |
| 5 | குறிஞ்சி நகரில் தார் சாலை அமைத்தல் | 8.92 |
| 6 | பிரையண்ட் நகரில் தார் சாலை அமைத்தல் | 13.95 |
| 7 | பி.வி.ஆர்.புரத்தில் தார் சாலை அமைத்தல் | 18.60 |

**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம் –கூடுதல் நிதியினை பொதுநிதியிலிருந்து செலவு செய்யலாம்.

இ1/13533/09

**<u>தீர்மானம் எண்: 166</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

2. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்கள் மேற்பார்வையாளர்கள், வாகன ஓட்டுநர்கள் போன்ற பணியாளர்களுக்கு 2009ம் வருடத்திற்கான காலனிகள் வழங்க உததேச செலவுத் தொகை ரூ 1.50லட்சத்திற்கும் தூத்துக்குடி காதி நிறுவனத்திலிருந்து வாங்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

எச்4/13959/09

**<u>தீர்மானம் எண்: 167</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

3, திரு. எம். சண்முகசுந்தரம் என்பவர் 10–07–2008ம் தேதிய விண்ணப்பத்தில் அக்ரோ பெட் பெடரேசன் நிறுவனத்தில் பிளாக் மேலாளராக பணிபுரிந்ததாகவும் மேற்படி நிறுவனம் தற்போது மூடப்பட்டுள்ளதால் அன்னார் மாநகராட்சி பணியில் தனது தகுதிக்கேற்ப (DME பட்டயம்) பணி வழங்குமாறு கோரிய விண்ணப்பத்தினை சென்னை ,நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் 25–08–2008ம் தேதிய 38837/2008/எப்2ம் எண் கடிதம் வாயிலாக இம்மாநகராட்சிக்கு அனுப்பி உள்ளார்கள்.

இம்மாநகராட்சி நகராட்சியாக இருந்த போது இளநிலை பொறியாளர் (பணி மனை) நிரந்தரபணி இடம் ஒன்று அரசாணை எண். 407 R.D.L.A நாள் 28–2–1973ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் இளநிலை பொறியாளராக பணிபுரிந்தவர் வயது முதிர்வு காரணமாக 31–7–2000ல் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதால் மேற்படி பணிமனை இளநிலை பொறியாளர் பணி இடம் 01–08–2000 முதல் காலியாக உள்ளது.

தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக்கப்பட்டுள்ளதால் மாநகராட்சி பணி விதிமுறைகள் படி மேற்படி பணி இடம் நியமனக்குழு மூலம் நிரப்பபடவேண்டிய பணியிடமாகும்.

மேற்படி இளநிலை பொறியாளர் பணி இடம் காலியாகி 6 மாத காலத்திற்கு மேல் ஆகிவிட்டதால் காலாவதியான பணியிடத்தினை மீள புத்துயிரளிப்பு (Revival) செய்யவும் மாநகராட்சி பணி விதிகளின்படி அரசின் அனுமதி பெறவும் மாமன்ற அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>குறிப்பு</u>** – மாமன்றம் அனுமதிக்கலாம்

இ2/27606/08

**<u>தீர்மானம் எண்: 168</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

4. இம்மாநகராட்சிப் பகுதியில் கொசுக்கள் மற்றும் முதிர்ந்த ஈக்களால் பரவக்கூடிய நோய்களை தடுக்கவும், சுற்றுப்புறச் சூழல் மாசுபடாமல் தவிர்த்திடவும், நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தினை கருத்திற்கொண்டு புகை போக்கி இயந்திரம் (Fogging Machine) இரண்டு எண்ணங்கள் தேவைப்படுவதால் அதனை தகுதியான விநியோகஸ்தர்களிடமிருந்து பெற்று பயன்படுத்திக்கொள்ளவும், ஏற்படக்கூடிய உத்தேச செலவினத்தொகை ரூ 6. 00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** அனுமதிக்கலாம்.

எச்1. 11237/ 2009

**<u>தீர்மானம் எண்: 169</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

மாமன்றம், தூத்துக்குடி
நாள் 28–8–2009

மேயர்,
மாமன்றம், தூத்துக்குடி